# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் ஸ்பெயின் ஆண்டு மாநாட்டில் (02.04.2010 அன்று)
## ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

இன்று அல்லாஹ்வின் அருளால் ஸ்பெயின் ஜமாஅத்தின் ஜல்ஸா ஸாலானா இந்த குத்பாவுடன் ஆரம்பமாகிறது. ஜல்ஸா ஸாலானாவானது அஹ்மதிய்யா ஜமாஅத் உறுதியாக நிலைநாட்டப்பட்டுள்ள எல்லா இடங்களிலும் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்று விட்டது. பல்வேறு நாடுகளிலுள்ள ஜமாஅத்துகள் மிகவும் ஆர்வத்துடன் இதற்காக ஆயத்தம் செய்து கொண்டிருக்கின்றன. ஏன்? எதற்காக இந்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன? உலகத்தில் நடைபெறும் சாதாரண திருவிழாக்கள் போன்று மக்கள் அனைவரும் மனமகிழ்ச்சியுடன் ஒன்றுகூட கலைந்து செல்வது போன்று நடைபெறும் ஒரு விழா அல்ல; நிச்சயமாக இல்லை. இந்த ஜல்ஸாக்கள் 120 ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. நாம் இங்கு இரண்டு மூன்று நாட்களுக்காக இங்கு ஒன்று கூடுவது காலத்தின் இமாமின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகத்தான் என்பதை இந்த மாநாடுகள் தெரியப்படுத்துகின்றன. தன்னை ஏற்றுக் கொண்டிருப்பவர்கள் ஓரிரண்டு நாட்கள் ஓரிடத்தில் ஒன்றுகூடி அல்லாஹ்,ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய வார்த்தையைக் கேட்க வேண்டும் என்று விரும்பியிருந்தார்கள். கேட்பது மட்டுமின்றி தமது வாழ்க்கையில் அதனை ஓர் அங்கமாக்க வேண்டும்; அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுத் தருகிற தூய மாற்றத்தை தம்மிடம் ஏற்படுத்த வேண்டும் என்றும் விரும்பினார்கள்.

மேலும் அஹ்மதிகள் ஓரிடத்தில் ஒன்றுகூடி இந்த ஜல்ஸாவை நடத்துவதற்கு இன்னொரு காரணம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஓர் வழிகாட்டல் என்னவென்றால், அன்னார் கூறுகின்றார்கள்:

இந்த ஜல்ஸாவை சாதாரணமாக மக்கள் நடத்தும் விழா என்று நினைக்காதீர்கள். இது உண்மைக்கும், கலிமாவுக்கும் ஆதரவாக அதனை நிலைநாட்டும் அடிப்படையில் நடத்தப்படுகிறது. இந்த ஜல்ஸா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உள்ளத்தின் விருப்பத்தை வெளிப்படுத்துவதற்காக மட்டும் அன்று. மக்கள் ஒன்றுகூடி அல்லாஹ், ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய விஷயங்களைக் கேட்க வேண்டும் என்பதற்காக மட்டுமின்றி இந்த ஜல்ஸா நடத்தப்பட்டதற்கும், நடத்தப்படுவதற்கும் முக்கிய காரணம், அந்தோ! மக்கள் தம்மை படைத்த இறைவனைப் பற்றி அறிய வேண்டுமே என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் இருந்த துடிப்பே ஆகும். அல்லாஹ்வுடைய அருளை ஈர்க்க வேண்டும் என்ற துடிப்பு ஆகும். இது களங்கமற்ற தூய, சத்தியத்திற்கு ஆதரவானதாகும். ஒவ்வொரு நபியும் இறை உதவிக்காகவே திட்டமிடுகின்றனர். அதனை நடைமுறைப்படுத்துவது இறைவனின் திருப்தியைப் பெற்றுத் தருகிறது. ஒரு மனிதனை இறைவனின் அருள்களை ஈர்க்கக் கூடியவனாக ஆக்குகிறது.

ஆனால் விஷயத்தை செய்யுமாறு அல்லாஹ்விடமிருந்து பிரத்யேக உத்தரவு கிடைக்கும் என்றால், அதனை செய்வது சாதாரண நிலையை விட்டு சற்று உயர்வாக இறைவனது அருள்களை ஈர்க்கச் செய்கிறது. அல்லாஹ்வுடைய உதவிகள் அத்துடன் இருக்குமெனில், ஒரு சாதாரண முயற்சி பலநூறு மடங்கு அதிகமாக இறை அருளுக்கு வாரிசாக்கி விடுகிறது; அளவற்ற அருளுக்கு காரணமாக்குகிறது. தனி மனிதர்களுக்கும் சரி, ஜமாஅத் அடிப்படையிலும் சரி அல்லாஹ்வுடைய இந்த உதவி கிடைக்கிறது. எனவே நம்மில் எவர் காலத்தின் இமாமின் குரலுக்கு பதில் கொடுப்பாரோ அவர் நற்பேறு பெற்றவர் ஆவார். அந்த மனிதர் தனக்குள் தூய மாற்றம் ஏற்படுவதற்காகவும் இஸ்லாத்தின் வெற்றியின் தக்தீரில் (நியதியில்) தாமும் ஒரு பகுதியாவதற்காகவும் இந்த ஜல்ஸாவில் பங்கு பெறுகிறார். அந்த வெற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஜமாஅத்திற்கு கிடைக்கும் என்று விதிக்கப்பட்டுள்ளது.

இன்றைய நாட்களில் இந்த ஆன்மீக சூழல், ஆன்மீக உணவுத்தட்டு பல்வேறு சொற்பொழிகள் மூலமாக உங்களுக்கு முன் எடுத்து வைக்கப்படும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வார்த்தைகளிலிருந்து பெற்ற அறிவே அதற்கு அடிப்படையாகும். பிறகு இறைவனின் சிறப்பான ஆதரவுகளையும் தாங்கி வருகின்ற இந்த ஜல்ஸாவிலிருந்து முழுமையாக பயனடைந்து தமது உலகம் மற்றும் மறுமை இரண்டையும் பெறுபவர்களாவோமாக. இந்த நோக்கத்தை மனதில் கொண்டவாறு ஜல்ஸாவில் கலந்து கொள்வதே பயனுடையது. அதுவன்றி இங்கு நீங்கள் வந்து சொற்பொழிவைக் கேட்டு, தற்காலிக உணர்ச்சி வசத்தை வெளிப்படுத்தி முழக்கமிடுவது பயனற்றதாகும். எனவே எப்போதும் உங்களை ஆய்வு செய்து வாருங்கள். இஸ்திக்ஃபார் செய்து வாருங்கள். தரூது ஓதி வாருங்கள். அதன் மூலமே உங்களுக்குள் புரட்சியை உருவாக்கி இஸ்லாத்தின் போதனையைப் பரப்பி அதனை வெற்றி கொள்ள வைப்பதில் பங்கெடுத்து இறை அருளை நெருங்குபவர்களாக முடியும். அதுவன்றி நான் ஏற்கனவே கூறியது போன்று ஒருவர் தமது உலகப் பணிகளை ஒதுக்கி விட்டு இங்கு வருகிறார் எனில் அவருக்கு என்ன இலாபம்? அவருக்கு பணமும் செலவாகி விட்டது. மார்க்கமும் கிடைக்காமல் போய் விட்டது. எனவே ஒருவர் தமது நேரத்தை இங்கு சரியாக செலவிட வேண்டும். எந்த நோக்கத்திற்காக வந்துள்ளார்களோ அதனை நிறைவேற்ற முயற்சி செய்யுங்கள். ஜல்ஸாவுடைய பரக்கத்துகளிலிருந்து பயனடைவதற்கு முழுமையாக முயற்சி செய்யுங்கள். இங்கு கலந்து கொண்டுள்ள இளைஞர்கள், முதியோர்கள், ஆண்கள், பெண்கள் அனைவரும் இதனை புரிந்து கொள்ள வேண்டும். இதனால் உங்களுக்கு மட்டும் பயன் அன்று. மாறாக, சிறிது சிறிதாக வெளியில் உள்ள நல்லியல்பு கொண்டோர் தங்களது ஆன்மீக பௌதீக முன்னேற்றத்தைப் பெறுவதற்கு இஸ்லாத்திற்குள் நுழையத் தொடங்கி விடுவர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக வரவிருக்கின்ற புரட்சி வாளினாலோ, அரசியல் செல்வாக்கினாலோ வரப்போவதில்லை. மாறாக உங்களுக்குள் தூய மாற்றம் ஏற்படுதல் மற்றும் துஆவின் மூலமே வரும். இதுவே நிரந்தரமான புரட்சியாகும். இஸ்லாத்தை எப்படி இந்த நாட்டை விட்டு அகற்றலாம் என்ற வாய்ப்பை எதிர்பார்த்திருந்தாலும் கூட எவராலும் இந்த புரட்சியை பறிக்க இயலாது. மாறாக இஸ்லாமிய போதனையை நாம் எப்படி நடைமுறைப்படுத்தலாம் என்று மற்றவரும் முயற்சி செய்யத் தொடங்குவர். எனவே இங்கு நீங்கள் சில நூறு பேர் இருக்கின்றீர்கள். பெரும்பாலார் பாகிஸ்தான் அஹ்மதிகளாக உள்ளனர். எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். உங்கள் மீது மிகப் பெரும் பொறுப்பு உள்ளது. இன்று ஒவ்வொருவரும் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றத்தின் வேகத்தை வரையறுக்க வேண்டியுள்ளது. **நாம் நமது செயலின் முன்மாதிரியைக் காட்டும் அளவுக்கும், துஆ செய்யும் அளவுக்கும் விரைவாக அஹ்மதியத்தின் வெற்றியை ஈர்ப்பீர்கள்.**

இந்த நாட்டிற்கு வர வேண்டிய வழியை அல்லாஹ் உங்களுக்கு திறந்து தந்துள்ளான். ஒரு காலத்தில் ஒரு மனிதர் காலத்தின் கலீஃபாவின் குரலுக்கு பதில் அளித்தவாறு இங்கு வந்தார். முற்றிலும் எதிர்ப்புதான் இங்கு இருந்தது. இஸ்லாம் என்ற பெயரே அடக்கி வாசிக்கப்பட்டது. தப்லீக் என்பது அதற்கு அப்பாற்பட்ட வேலையாக இருந்தது. பொருள் ரீதியாகவும் ஜமாஅத்திற்கு மிகவும் சிரமம் இருந்தது. எந்த உதவியும் கிடைக்கவில்லை. சுயமாக வாணிபம் செய்து, நறுமணப் பொருள்களை விற்று தனது குடும்பத்தையும் பார்த்துக் கொண்டு, ஜமாஅத் செலவுகளையும் கவனித்துக் கொண்டார்கள். இது ஓர் ஆர்வமாகும். இவ்வாறுதான் இங்கு நமது முதல் முபல்லிக்காக கரம் இலாஹி சாஹிப் ஸஃபர் பணியாற்றி வந்தார். கடைசியில் இறைவனின் திருப்திக்கேற்ப அந்த கஷ்டங்களின் காலகட்டம் முடிவுக்கு வந்தது. ஜமாஅத்தின் பலர் இங்கு வந்து குடியேறும் வாய்ப்பு ஏற்பட்டது. முபல்லிக்குகள் வருவதற்கு சுலபமான பல வழிகள் உருவாயின. ஓர் அழகிய மஸ்ஜித் கட்டும் வாய்ப்பு ஜமாஅத்திற்கு கிடைத்தது. இங்கு வருபவர்கள் ஆய்வு செய்து பார்த்தால் அவர்களின் உள்ளம் அதற்கு சாட்சி சொல்லும். ஐரோப்பாவின் மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் வளர்ச்சி குறைவாக இருப்பினும் ஸ்பெயினில் வந்து குடியேறியுள்ள பலரது பொருளாதார நிலை நன்றாகவே உள்ளது. பாகிஸ்தானுடன் ஒப்பிடும் போது இங்கு அமைதியும் கிடைத்துள்ளது. சில நல்லொழுக்கக் கேடுகளில் ஐரோப்பிய நாடுகள் மூழ்கியிருப்பினும் அதுபற்றி இப்போது நான் கூறப்போவதில்லை. சில

பெற்றோர்களுக்கு தங்களது பிள்ளைகளின் மார்க்க நிலை தடம் புரண்டு போய் விடுமே! என்பது குறித்து நிச்சயமாக கவலையிருக்கவே செய்கிறது. இங்கு மார்க்க சுதந்திரம் மிகவும் நன்றாக இருக்கிறது. அதனால் ஒரு மனநிம்மதியும் இங்கு கிடைக்கிறது என்பதைப் பற்றி தான் நான் கூறுகிறேன். இப்போது இங்கும் பிரச்சனைகள் ஆரம்பித்து விட்டன. சில இடங்களில் மினாரா கட்டுவதற்கு தடைவிதிக்கிறார்கள். பர்தா அணிவதற்கு தடை உள்ளது. அப்படியெல்லாம் இருந்தாலும் பொதுவாக ஒரு சுதந்திரம் தற்போதைக்கு இங்கு காணப்படுகிறது. நீங்கள் பாங்கு சொன்னால் கைது செய்யப்படுவீர்கள். கலிமா சொல்லி தவ்ஹீதை பிரகடனப்படுத்தினால் சிறைக்கு அனுப்பப்படுவீர்கள் என்று இந்த நாடுகளின் அரசுகள் எந்தவொரு வாளையும் ஏந்திக் கொண்டு நிற்கவில்லை. இந்த வகையில் ஒரு சுதந்திரம், அமைதி, சமூக மேம்பாடு நமக்கு இங்கு கிடைத்துள்ளதற்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துங்கள். நன்றி செலுத்தியவாறு அதிகமதிகம் அல்லாஹ்வுடைய அருட்களை ஈர்ப்பவர் ஆகுங்கள். இந்த உலகியல் முன்னேற்றங்கள் மார்க்கத்தை மறக்கடிப்பவையாகி விடக்கூடாது. மார்க்கத்தை விட்டு தூர விலகி விடுபவர்களாகி விடக் கூடாது. நமது ஏதாவது பெருமை, சிறப்பினால் அல்லாஹ்வின் அருள் நம்மீது பொழிந்து விட்டது என்று நினைக்க வேண்டாம். அல்லாஹ் உண்மையில் நம்மிடம் கூறியதாவது உலகியல்வாதிகள் யாரை மகிழ்ச்சிப்படுத்த நினைத்தார்களோ அவர்களுக்காகவும், அவர்களில் ஏழைகள், வசதிவாய்ப்புகள் குறைந்தவர்களுக்காகவும் அல்லாஹ் தனது சார்பாக அபிவிருத்தியை வழங்குகிறான். எப்போதும் உள்ளத்தில் கவனம் இருக்க வேண்டும். நமக்கு தருவதற்கு ஆற்றல் பெற்ற இறைவன் அவன் நமது ஏதாவது ஒரு அமல் பிடிக்காதபோது கோபத்தை வெளிப்படுத்தவும் ஆற்றல் படைத்தவனாவான். இறை கோபத்தின் முன் எவரும் நிற்க இயலாது. எனவே எப்போதும் ஆய்வு செய்து வாருங்கள். நமக்கு உலக வசதிவாய்ப்புகள் கிடைத்துள்ளன. அவை நம்மை மார்க்கத்தை விட்டு தூர விலக்கி விடக்கூடாது. அவ்வாறு செய்து கொண்டிருந்தால் உண்மையில் அதுவே கவலைப்படத்தக்கதாகும். மிகவும் கவலைப்பட வேண்டிய இடமாகும். எனவே உலகியல் ரீதியாக நாம் முன்னே எடுத்து வைக்கின்ற ஒவ்வோர் அடியும் நம்முடைய சுற்றுப்புறத்தில் ஓர் புரட்சியை ஏற்படுத்தும். இந்த நாட்டைப் பொருத்தவரை கடந்த 800 ஆண்டுகாலமாக நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற புரட்சியை உருவாக்கும். கடந்த குத்பாவில் நான் ஓர் ஹதீஸின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய ஒரு கவலையைப் பற்றி கூறினேன்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

உங்கள் ஏழ்மை எப்படி விலகப் போகிறதோ என்று உங்களைப் பற்றி நான் கவலைப்படவில்லை. எமது உம்மத்திற்கு செல்வம் கிடைக்குமா கிடைக்காதா என்று கவலைப்படவில்லை. ஏனெனில் இவையெல்லாம் ஒரு காலத்தில் உங்களுக்கு கிடைக்கத்தான் போகிறது. ஆனால் உலக செல்வம் உங்களுக்கு கிடைத்து பிற சமுதாயங்களைப் போன்று நீங்களும் அழிந்து விடக்கூடாதே! என்ற கவலையே எனக்கு உண்டு.

பாருங்கள் எண்ணெய் வளம் அரபு நாட்டு மக்களை மார்க்கத்தை விட்டு தூர விலக்கி விட்டது. அவர்களே இஸ்லாத்தின் கொடியை உயர்த்திப் பிடித்திருப்பவர்கள் என்று தம்மைக் கூறிக்கொள்கிறார்கள். ஆனால் அவர்களின் அமல் அதிலிருந்து அவர்களை விலக்கிவிட்டது.

இஸ்லாம் என்றால் என்ன என்பதை நாம் அரபிகளிடம் இருந்து தான் கற்றுக் கொண்டோம். குறிப்பாக சவூதி அரேபியாவைச் சேர்ந்த மக்களிடமிருந்து இஸ்லாத்தை கற்றோம் என்று நினைக்கிற மக்களிடம் இந்த மக்களின் நடத்தை தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அம்மக்கள் நடந்து காட்டுவதுதான் அசல் இஸ்லாம் என்று நினைத்து விடுகின்றனர். நைஜீரியாவில் ஒரு முஸ்லிம் ஹஜ் செய்து விட்டு வந்தார். பிறகும்கூட மது அருந்துவதை விடவில்லை. ஓர் அஹ்மதி அம்மனிதரிடம், இப்போதாவது இறைவனை அஞ்சுங்கள். நீங்கள் ஹஜ் செய்து விட்டு வந்துள்ளீர்கள். மது அருந்துவதை விட்டு விடும் என்று கூற அம்மனிதர் அஹ்மதியிடம் கேட்டார். நீங்கள் என்ன இஸ்லாத்தைப் பற்றி எம்மிடம் கூறுகிறீர்கள்? நான் சவூதி அரேபியாவிலும் மதுவை பார்த்தேன். முஸ்லிம்கள் மது குடிப்பதையும் பார்த்துள்ளேன். ஏன்? மக்காவின் சுற்றுப்புறத்தில் உள்ள அரபிய முஸ்லிம்கள் கூட மது அருந்துவதை பார்த்துள்ளேன்.

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த கவலை ஒரு வகையில் முன்னறிவிப்பாகும். செல்வம் வந்ததனால் என் உம்மத் அழிந்துவிடக் கூடாது. மது அருந்துவது தீமைகளின் தாய் எனப்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளை மூலம் அதனை தடுத்து விட்ட போது மதீனாவின் வீதிகளில் தண்ணீரைப் போன்று மது ஓட ஆரம்பித்தது. சஹாபாக்கள் மதுக் கலயங்களை உடைத்து விட்டனர். ஆனால் இவ்வாறு ஓர் ஆப்பிரிக்கர் தனது பாவங்களிலிருந்து தூய்மையாவதற்காக ஹஜ்ஜிற்கு சென்று விட்டு, பாவம் செய்வதற்கு துணிச்சல் பெற்றவராக திரும்பி வருகிறார். இதனை விட பெரிய அழிவு வேறென்ன வேண்டும்? செல்வத்தின் காரணமாக இன்று முஸ்லிம்கள் சோதனைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். மிகவும் வெறுக்கத்தக்க நிலைக்கு ஆளாகி விட்டனர். அல்லாஹ் இந்த மதுவை இஸ்முன் கபீர் (பெரும் பாவம்) என்று கூறியுள்ளான். அதாவது மீண்டும் மீண்டும் பாவம் செய்யத் தூண்டுகிறது. நன்மைகளிலிருந்து தடுக்கிறது. மது, சூது இரண்டையும் பெரும் பாவம் என்று கூறி, மதுவுடன் சூதாட்டத்தையும் சேர்த்துக் கூறியுள்ளான். இந்த தீமை முஸ்லிம்களின் அழிவுக்கு காரணமானது. ஒவ்வொருவரின் அழிவுக்கும் இது காரணமானது மார்க்கத்திலிருந்து அகற்றக் கூடியது. இறைவனை விட்டு தூர அகற்றக் கூடியது. மனிதன் இறைவனை விட்டு விலகும்போது தன் மீது அழிவை போட்டுக் கொள்கிறான். இங்கு மது தண்ணீரைப் போன்று அருந்தப்படுகிறது. ஒவ்வொரு கடையிலும், Restaurant -லும், Petrol Bulk -லும் மதுவும் கிடைக்கிறது. சூதாட்டத்திற்கான இயந்திரமும் வைக்கப்பட்டுள்ளது. இது முன்னேற்றத்தின் அடையாளமாக கருதப்படுகிறது. அஹ்மதிகள் மிகவும் எச்சரிக்கையாக செல்ல வேண்டும். தம்மை மட்டும் இந்த பாவத்திலிருந்து காப்பாற்றிக் கொண்டால் போதாது. தமது குழந்தைகளையும் அவர்கள் வாலிப வயதை நெருங்கும் போது சிறப்பாக கவனம் செலுத்தி இதில் வீழ்ந்து விடாமல் காப்பாற்ற வேண்டும். இந்த தீமையின் தீவிரத்தை குறித்து தெளிவுபடுத்த வேண்டும். சூதாட்டத்தின் வழக்கம் விளையாட்டாக ஆரம்பிக்கிறது. அதுவும் ஒரு போதைதான். அதிகமாக நம்மை தமக்குள் ஈர்த்துக் கொள்கிறது. பிறகு அதில் மனிதன் மூழ்கிவிடுகிறான். சில அஹ்மதிகளிடம் இது காணப்படுகிறது. ஆனால் இத்தீமை அஹ்மதியல்லாதவரிடம் மிக அதிகமாக காணப்படுகிறது. அதனை பாவமாகவே அவர்கள் கருதுவதில்லை. ஐரோப்பாவின் நாகரீகத்தில் மூழ்கி தமது வீட்டிலும் குடிப்பதற்கு ஒரு இடம் வைத்திருக்கின்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மது தயாரிப்பவர், விற்பவர், குடிப்பவர், ஊற்றிக் கொடுப்பவர் எல்லாரையும் சபித்துள்ளார்கள். இது எத்தகைய பயங்கரமான நிலை!

அஹ்மதிகளிடம் நான் ஒன்றை கூற விரும்புகிறேன். அதுபோன்ற இடங்களில் அவர்கள் வேலை செய்யக் கூடாது. மதுவை பரிமாறும் வேலையாக இருந்தாலும் சரி அந்த வேலையை செய்யக் கூடாது. இது அழிக்கக்கூடியது ஆகும். முஸ்லிம் அல்லாத Restaurant -களில் சாராயம் விற்பனை செய்கிறார்கள் . எனவே அவர்களது வியாபாரம் நன்றாக இருக்கிறது என்று நினைக்கக் கூடாது. சில முஸ்லிம்கள் மதுக்கடைகளை நடத்துகின்றனர். அதனை பொருட்படுத்தவில்லை. ஆனால் அதிலிருந்து கிடைக்கும் செல்வம் அழிவின் பக்கம் எடுத்துச் செல்லக் கூடியது. இறைவனது நெருக்கத்தை பெற்றுத் தருகிற தூய உணவே நமக்குத் தேவை. அத்தகையவரே அருளுக்குரியவர். அவர்களுக்கு மார்க்கத்தின் கண் குருடாக உள்ளது. முன்னறிவிப்பிற்கேற்ப உலக சுகபோகங்களில் வசதிவாய்ப்புகளும் அவர்களுக்கு அதிகமாக கிடைக்கும். எனவே இதையெல்லாம் இவர்கள் பொருட்படுத்தமாட்டார்கள் என்று வந்துள்ளது. ஆனால் ஒரு உண்மையான முஸ்லிமின் குறிக்கோள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதாகும்.

இஸ்லாத்தைத் தவிர எல்லா மார்க்கமும் ஆன்மீக ரீதியாக மரித்து விட்டன. இக்கால மார்க்கப் போதனைகளுக்கேற்ப எது தீமையில்லையோ அதனை செய்கின்றனர். அது தீமை என்றாலும் கூட அவர்கள் அதனை பொருட்படுத்தப் போவதில்லை. விளைவைப் பற்றிய கவலையும் இல்லை. தமது அமல்களின் தரத்தை குறைத்து விட்டது மட்டுமின்றி நன்மை தீமைகளின் அளவுகோலையும் கூட மாற்றி விட்டனர். இன்று இஸ்லாம் மட்டுமே உயிருள்ள இறைவனை எடுத்து வைக்கின்றது. இஸ்லாம் மட்டுமே கியாமத் வரைக்குமான நிரந்தரமான ஈடேற்றத்தின் வாசலைக் காட்டுகிறது. இஸ்லாத்தின் இறைவனே இஸ்லாமின் வீழ்ச்சியின்

காலத்திலும் கூட மார்க்கத்தை புதுப்பிப்பதற்காக தனது தேர்ந்தெடுக்கப்பட்ட வரை அனுப்பப் போவதாக வாக்குறுதி அளித்துள்ளான்; அனுப்பவும் செய்கிறான். இன்று இஸ்லாத்தின் இறைவனே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது மற்றும் வாக்களிக்கப்பட்ட மஹ்தியை அனுப்பினான். கார்த்திகை நட்சத்திரத்திலிருந்து ஈமானை திரும்பக் கொண்டு வருவதற்காக அனுப்பினான். இன்று இஸ்லாத்தின் இறைவனே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்குப் பிறகு அன்னாரின் கிலாஃபத் அமைப்பை தொடரச் செய்தான். அந்த அமைப்பு நிரந்தரமான அமைப்பாகும். அது மூஃமின்களின் ஜமாஅத் ஒரு கயிற்றில் ஒன்றுகூட்டுவதற்காக இறைவனால் உருவாக்கப்பட்டதாகும். அதன் மூலமே ஒவ்வொரு மனிதரின் ஆன்மீக அழகும் வெளிப்படும். மார்க்கத்திற்கு உலகத்தை விட முன்னுரிமை வழங்குவதற்காக ஒவ்வொரு காலத்திலும் வழிகாட்டியின் தேவை இருந்தது. ஆகவே முஸ்லிம்களின் மார்க்கம் உயிருள்ள மார்க்கமாகும். எப்போதும் நிலைத்து நிற்கக்கூடிய மார்க்கமாகும். அதனை பாதுகாப்பதற்கு அல்லாஹ் வாக்களித்துள்ளான். அது உயிருள்ள மார்க்கமாகும். அது வெற்றி பெறும் என்று இறைவனது வாக்குறுதியும் உள்ளது. ஆகவே ஒரு முஸ்லிம் மார்க்கத்திலிருந்து விலகுகிறார் எனில் அவர் தமது உலகம் மற்றும் மறுமை இரண்டையும் வீணாக்குகிறார். அஹ்மதிய்யத்தாகிய உண்மை இஸ்லாமே இனி வெற்றி பெறும் இன்ஷா அல்லாஹ். எந்த ஆற்றலும் அதனை தடுக்க முடியாது. நாம் நம்மை அஹ்மதி என்று கூறிக்கொள்கிறோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பரின் கையில் செய்த பைஅத் உடன்படிக்கைக்கேற்ப தமது வாழ்க்கையை நடத்துவதாக வாதிடுகின்றோம். அதன் இலக்கு உலகமல்ல. மாறாக, மார்க்கம் தான் அதன் குறிக்கோளாகும். அதுவன்றி இந்த பைஅத்தினால் ஒரு பயனும் இல்லை. நான் ஏற்கனவே கூறியது போன்று இஸ்லாம்தான் வளர்ச்சியடைய இருக்கின்றது. அஹ்மதிய்யத் இன்ஷா அல்லாஹ் வெற்றியின் நாளைக் காணவிருக்கின்றது. இஸ்லாமே உயிருள்ள மார்க்கமாகும். அது ஒருபோதும் மரணிக்காது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியது போன்று இந்த மார்க்க போதனையை எவர் மறப்பாரோ அவர் அழிவுக்காளாவார். தனது அழிவின் பக்கம் செல்வார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்கு இஸ்லாத்தைப் பற்றி கவலையாக உள்ளது என்று கூறவில்லை. உங்கள் செயல்களினால் இது அழிந்து போய்விடக் கூடாது என்ற கவலை எனக்கு இல்லை. இது இறைவனின் வாக்குறுதியாகும். இறைவனின் வாக்குறுதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முழுமையான நம்பிக்கை இருந்தது. என்ன நிலை ஏற்பட்டாலும் கடைசி வெற்றி இஸ்லாத்திற்கு தான் என்ற உறுதி இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது உம்மத்தின் மக்களுக்கு எச்சரிக்கை செய்தார்கள். நீங்கள் சொகுசு, ஆடம்பரம், செல்வம் இவற்றைக் கண்டு மார்க்கத்தை விட்டு விலகி உங்களை நீங்களே அழிவில் போட்டுக் கொள்ள வேண்டாம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சஹாபாக்கள் செல்வந்தர்களாக இருந்தும் கூட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கினார்கள். உலகத்தை சம்பாதித்துக் கொண்டிருந்தாலும் மார்க்கமே அவர்களிடம் முன்னுரிமை பெற்றிருந்தது. தமது செல்வத்தை மார்க்க வழியில்அளவின்றி செலவு செய்தார்கள். அவர்கள் மிகவும் வறுமையையும் பார்த்தார்கள். செல்வ வளத்தையும் கண்டார்கள். மரணிக்கும் போது சஹாபாக்களிடம் கோடிக்கணக்கில் செல்வம் இருந்தது. கோடிக்கணக்கில் பகிர்ந்தளிக்கப்பட்டது. இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்காக அளவில்லாமல் செலவு செய்தனர். கருமித்தனம் செய்து பொருள் சேர்த்ததில்லை. அல்லாஹ்வின் அருளை ஈர்ப்பவர்களாக இருந்தனர்.

மார்க்கத்தின் கடமையை மிகவும் முயற்சி செய்து நிறைவேற்றினர். நாமும் இந்த முன்மாதிரியை நம்முன் வைக்க வேண்டும். நாமும் இந்த முன்மாதிரியின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அப்போதுதான் நாம் முன்னவர்களுடன் இணைந்து தொடர்ச்சியாக கிடைக்கும் வெகுமதியைப் பெற முடியும். அப்போதுதான் நாம் இறைவனின் அருளை ஈர்க்க முடியும்.

ஸ்பெயினில் இருக்கும் அஹ்மதிகள் நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் இருக்கும் இந்த நாட்டில் ஒரு காலத்தில் இஸ்லாமிய ஆட்சி இருந்தது. பெரும்பாலார் இங்கு முஸ்லிம்களாக இருந்தனர். இங்கு நூற்றுக்கணக்கான வருடங்கள் கழிந்த பிறகும் கூட மிக உன்னதமான கட்டிடங்கள் முஹல்லாக்கள்,

மஸ்ஜித்துகள் ஆகியவற்றில் லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்ற வாசகம் காணப்படுகிறது. ஆனால் இந்த முஸ்லிம்கள் மார்க்கத்தை மறந்து கவனமற்றுப் போனதன் விளைவாக ஒவ்வொரு அடியிலும் படிப்பினைக்குரிய தாழ்வு ஏற்பட்டது. ஒரு காலத்தில் கிறித்தவ மன்னர்கள் தமது ஆட்சியில் நிலைத்திருக்க முஸ்லிம் மன்னர்களின் தயை வேண்டியிருந்தது. முஸ்லிம்களின் மீது உள்ளத்தில் காழ்ப்புணர்ச்சியும் எதிர்ப்பும் அவர்களுக்கு இருந்தபோதிலும் தமது இலக்கை அடைவதற்காக தமது எல்லா கண்ணியத்தையும் அடக்கிக் கொண்டு முஸ்லிம் மன்னர்களின் சபையில் ஆஜராகினர். இதனைக் குறித்து கிறத்தவ வரலாற்றாசிரியர்களும் கூட எழுத வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாயினர். உலக அடிப்படையிலும் இஸ்லாமிய மன்னர்களின் மகத்துவத்தைக் கண்டு தாக்கத்திற்குள்ளாகாமல் இருந்ததில்லை. பிறகு முஸ்லிம் மன்னர்கள் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டதாலும் அவர்களின் நோக்கம் செல்வம் மட்டுமே என்றாகி விட்டதால், வீண் ஆடம்பரங்களில் மூழ்கி விட்டதாலும் இந்த மகத்துவம், கண்ணியம் அனைத்தும் மாறி விட்டது. முஸ்லிம் மன்னர்கள் கிறித்தவ மன்னர்களிடம் அடைக்கலம் தேடத் தொடங்கினர். ஐரோப்பிய நாடுகளில் முஸ்லிம்களின் ஆட்சி முடிவுக்கு வந்தது. இழிவையும் தோல்வியையும் சந்தித்தது. ஆனால் அல்லாஹ்வுடைய வாக்குறுதி இறுதி வெற்றி இஸ்லாத்திற்கு தான் என்றிருந்ததால் இந்த வேலையை முழுமைப்படுத்த அல்லாஹ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை எழுப்பினான்.

அதே வேலை தான் இன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டிருப்பவர்களின் மீது சுமத்தப்பட்டுள்ளது. இதுவே மார்க்கத்தை உயிர்ப்பிக்கும் பணியாகும். இதுவே நமக்கு நிரந்தர வாழ்வு வழங்கும் பணியாகும். நாம் உலக ஆசைகளில் வீழ்ந்து, இந்த நாட்டிற்கு வந்து நமது பணி முழுவதும் உலகம் சார்ந்ததாகவே முற்றிலும் ஆகி விட்டால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் செய்த பைஅத் உடன்படிக்கைக்கு மாற்றமானது. எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

நாம் உறுதிமொழி எடுத்துள்ளோம். அது குறித்து கண்டிப்பாக அல்லாஹ் கேட்பான்.

**வ அவ்ஃபூ பில் அஹ்தி இன்னல் அஹ்த கான மஸ்வூலா - மேலும் (உங்கள்) உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். நிச்சயமாக ஒவ்வோர் உடன்படிக்கையைக் குறித்தும் விசாரிக்கப்படும். (17 : 35)**

அல்லாஹ்வின் ரஹ்மத் கண்டிப்பாக பரந்து விரிந்தது. அதன் கீழ் எவர் சென்றாலும் அவர் மீது கருணை காட்டப்படும். ஆனால் நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். அல்லாஹ்வை ஒருபோதும் ஏமாற்ற இயலாது. அவன் நினைத்தால் நமது ஒவ்வொரு உடன்படிக்கை பற்றியும் கேள்வி கேட்பான். எனவே மனிதன் தன்னை குறித்து ஆய்வு செய்யத் தொடங்கினால் மிகவும் பயந்து போய் விடுவான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்துள்ளோம். அதனை நிறைவேற்ற வேண்டும். பைஅத் நிபந்தனைகளைப் பாருங்கள். அல்லாஹ்வுடைய எல்லா உரிமைகளையும் அடியார்களின் எல்லா உரிமைகளையும் நிறைவேற்ற வேண்டும் என்பதே அதன் சுருக்கமாக இருக்கும். எப்போதும் அதுவே நமது குறிக்கோளாக இருக்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கண்டிப்பாக சலவாத் ஓத வேண்டும். அவர்களின் உண்மைப் பேரன்பருடன் முழுமையான கட்டுப்படுதலின் தொடர்பு வைக்க வேண்டும். மார்க்கம் எப்போதும் உலகை விட முதன்மை பெற வேண்டும். பைஅத்தின் 10 நிபந்தனைகளையும் ஒவ்வோர் அஹ்மதியும் தம் முன்னால் வைக்க வேண்டும். அப்போதுதான் நாம் நமது ஆன்மீகத்திற்கான ஆயத்தங்களை செய்ய முடியும். அப்போதுதான் மார்க்கத்தை உயிர்ப்பிக்கும் பணியில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நம்பிக்கைக்குரியவராகவும், ஒத்துழைப்பு நல்குபவராகவும் ஆக முடியும்.

சில வேளை மனிதன் தனது சொந்த வேலையில் மூழ்கி தனது தேவைகளின் காரணத்தால் மார்க்க விஷயத்தில் தனது கடமையை சரியாக நிறைவேற்ற முடியாமல் போகிறது. மனித இயல்பும் அவ்வாறுதான் உள்ளது. எனவே அவ்வப்போது பைஅத் நிபந்தனைகளை நினைவுபடுத்த வேண்டும்.

ஸ்பெயின் அஹ்மதிகளுக்கு நான் ஏற்கனவே கூறியது போன்று கடந்த கால வரலாற்றையும் பார்த்து விழிப்படைவதற்கு ஏற்ற அடையாளங்கள் அவர்களின் ஒவ்வொரு அடியிலும் காணக்கிடைக்கின்றன. அந்த அடையாளங்கள் நாம் நம்மை ஆய்வு செய்வதற்கு கவனமூட்டுகின்றன. ஒவ்வொரு பெரிய சாலைகள், பெரு நகரங்கள் மேலும் எங்கு திரும்பினாலும் இஸ்லாத்தின் பெயரையும் மகத்துவத்தையும் இங்கு காண முடிகிறது. ஆனால் செல்வ வேட்கை, உட்புற அரசியல், உலக ஆடம்பர மோகம், உல்லாசம் ஆகியவற்றில் மூழ்கிவிட்டதனால் அவர்கள் ஆட்சியெல்லாம் பழங்கதைகளாகி விட்டது. ஒரு முஸ்லிம் நாடு முஸ்லிம்களின் கையை விட்டு போய் விட்டது. இன்று மறைந்து போய்விட்ட இந்த மகத்துவத்தை அஹ்மதிய்யா ஜமாஅத்தான் இனி நிலைநாட்ட வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மையான அடிமையாகிக் காட்ட வேண்டும். இஸ்லாமிய போதனைகளின் செயல் முன்மாதிரியாகிக் காட்ட வேண்டும். அந்த முன்மாதிரி அன்பு, நேசம் சகோதரத்துவத்தை தவிர வேறெதுவும் இல்லை. நமது பிறப்பின் நோக்கத்தை நாம் புரிந்து கொள்ளும்போதுதான் இந்நிலை உருவாகும். ஒவ்வொரு அஹ்மதி ஆண், பெண், குழந்தை, வயோதிகர் அனைவரும் தமது பிறப்பின் நோக்கத்தை புரிந்து கொள்ள வேண்டும். இதனைக் குறித்து திருக்குர்ஆனில் அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:

**வமா கலக்துல் ஜின்ன வல் இன்ஸ இல்லா லியஃபுதூன்** - மனிதர்களையும் ஜின்களையும் நம்மை வணங்குவதற்காகவே படைத்துள்ளோம். (51:57)

இந்த நோக்கத்தை எடுத்து வைப்பதற்காக இபாதத்தின் தரத்தை முழுமைப்படுத்த வேண்டும். அப்போது தூய மாற்றம் ஏறபடத் தொடங்கும். ஆன்மீக வாழ்வுக்கும் வழிவகை ஏற்படும். மற்றவரின் ஆன்மீக வாழ்வுக்காகவும் முயற்சி செய்யத் தொடங்குவோம்.

**<u>ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:</u>**

மனிதன் இயல்பாகவே இறைவனுக்காகவே படைக்கப்பட்டுள்ளான். அதனைக் குறித்து இறைவன் கூறுகிறான்: **வமா கலக்துல் ஜின்ன வல் இன்ஸ இல்லா லியஃபுதூன்** - மனிதர்களையும் ஜின்களையும் நம்மை வணங்குவதற்காகவே படைத்துள்ளோம். (51:57)

இதிலிருந்து மனிதனின் இயல்பில் தனக்காக ஒரு ஈர்ப்பை சிறிது வைத்துள்ளான். மறைமுகத்திலும் மறைமுகமான ஏதோ ஒரு காரணியை அவனிடம் தனக்காக உருவாக்கியுள்ளான். மனிதனின் படைப்பின் நோக்கம் அல்லாஹ்வுக்கு இபாதத் செய்யுங்கள் என்று இதிலிருந்து தெரிய வருகிறது. இந்த அசல் நோக்கத்தை விட்டு விட்டு விலங்குகளைப் போன்று உண்பதும் குடிப்பதும் வாழ்வின் நோக்கமாக கொள்கின்றனர். இறைவனை விட்டு விலகிவிடுகின்றனர். மனிதனின் பொறுப்பு **வமா கலக்துல் ஜின்ன வல் இன்ஸ இல்லா லியஃபுதூன்** - மனிதர்களையும் ஜின்களையும் நம்மை வணங்குவதற்காகவே படைத்துள்ளோம். (51:57) என்பதில் ஈமான் கொண்டவாறு வாழ்வின் நோக்கத்தை மாற்றிவிடுங்கள்.

மனித வாழ்வின் நோக்கம், இபாதத்தில் உள்ள சோம்பேறித்தனத்தை அகற்ற வேண்டும். உயர் தகுதி பெற முயற்சி செய்ய வேண்டும். மரணத்தைக் குறித்து எந்த உத்தரவாதமும் இல்லை. நீங்கள் அவனுக்கு இபாதத் செய்யுங்கள். உலகம் உங்கள் குறிக்கோளாக இருக்கக் கூடாது. நான் இதனால் இவ்விஷயத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறேன். அது இதுதான். மனிதன் எதற்காக இவ்வுலகத்திற்கு வந்தானோ அதனை விட்டு விலகியுள்ளான். உலக தொழில்கள், வேலைகளை விட்டு விட்டு மனைவி மக்களை விட்டு விலகி ஏதாவது காட்டுக்குப்போய் உட்கார்ந்து விடுங்கள் என்று நான் கூறவில்லை. இஸ்லாம் அதனை அனுமதிக்கவில்லை. துறவறம் இஸ்லாத்தின் விருப்பம் அன்று. அல்லாஹ், மனிதன் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறான். நீங்கள் உங்கள் தொழில்களை முழு மூச்சாக செய்யுங்கள்.

ஹதீஸில் வருகிது. எவரிடமாவது நிலம் இருந்தால் தனது வேலையில் தொழிலில் முழு கவனம் செலுத்தவில்லை எனில் அது குறித்தும் கேட்கப்படுவீர்கள். உலக தொழில்களில் மூழ்கிவிட வேண்டும் என்று எவராவது இதற்கு பொருள் கொண்டால் அது தவறாகும். அசல் விஷயம் என்னவெனில் நீங்கள் இறைதிருப்தியை பெறுவது மட்டும் உங்கள் நோக்கமாக இருக்க வேண்டும். ஷரீஅத்திற்குப் புறம்பான ஒரு பணி செய்வதில் சூதாட்டம் குடியில் மூழ்கி விடுவதால் அல்லாஹ்வின் திருப்தி கிடைக்குமா என்ன?

எனவே இந்த அடிப்படை விஷயத்தை ஐரோப்பாவில் வாழும் ஒவ்வொரு அஹ்மதியும் புரிய வேண்டும்.

திருப்தி தான் நோக்கம் எனில் அவனது திருப்தியைவிட்டு விட்டு நமது சுய நோக்கத்திற்கு முன்னுரிமை வழங்கக் கூடாது. ஒவ்வொரு விஷயத்திலும் இறை விருப்பத்தை பார்க்க வேண்டும். எனவே இந்த நோக்கத்தைப் பெறுவதற்கு பயிற்சி பெறுவதற்காக நாம் இங்கு கூடியுள்ளோம். இந்த நாட்களில் நாம் குறிப்பாக இபாதத்துகளில் கவனம் செலுத்த வேண்டும். துஆவில் கவனம் செலுத்த வேண்டும். அறிவிப்பூர்வமான சொற்பொழிவுகளில் இருந்து தற்காலிகமான பயனடையாமல் உங்கள் பைஅத்தை புதுப்பித்தவாறு உங்கள் வாழ்வில் ஒரு புரட்சி ஏற்படுத்துவதற்கு உங்கள் பாதத்தை முன்னெடுத்து வையுங்கள். வாழ்வின் கட்டாய அங்கமாகக் கூடிய தூய மாற்றத்தை ஏற்படுத்துங்கள். நாம் நம்மீது தூய மாற்றத்தை ஏற்படுத்தியவாறு திரும்பியுள்ளோம் என்ற உணர்வு இங்கிருந்து வீட்டிற்கு திரும்பிய பின்னரும் இருக்க வேண்டும். மேலும் துஆ செய்யுங்கள். இந்த நாட்டின் நிலைமைகளை நான் முதலில் கூறினேன். அந்த நிலைமைகளால் நாம் மீண்டும் ஒரு ஹிஜ்ரத் செய்ய வேண்டிய நிலை வந்துவிடக் கூடாது. அப்படியே இங்கிருந்து ஹிஜ்ரத் செய்ய வேண்டியது ஏற்பட்டாலும் நமது சொந்த நாட்டுக்கு திரும்ப வேண்டும். அதுவும் சுதந்திரமான நமது மார்க்கப் பணியாற்றும் நிலையிலும், எளிதாக அதனைப் பரப்பவும் முடியும் நிலையிலும் திரும்ப வேண்டும்.

இந்த ஜல்ஸாவில் கலந்து கொள்பவர்கள் எப்போதும் நமது தகுதியைக் கவனத்தில் கொள்ள வேண்டும். துஆ, தரூது ஓதி வர வேண்டும். மராக்கூஸிலிருந்து இந்த ஜல்ஸாவைக் காண்பதற்கு வந்திருப்பவர்கள் தமது நடத்தையின் மூலம் இங்கிருப்பவர்களை ஈர்க்கத்தக்க முறையில் நடந்து கொள்ள அல்லாஹ் வாய்ப்பை வழங்குவானாக.

இப்போது பாகிஸ்தானில் கொடும் சம்பவம் ஒன்று நடந்துள்ளது. அதுபற்றி நான் கூறப்போகிறேன். மிகவும் பரிதாபகரமான அநீதியான வேலை நடந்துள்ளது. இப்போது தகவல் வந்துள்ளது. வியாழன் அன்று (01.04.10) இரவு பாகிஸ்தான் நேரப்படி 10 மணிக்கு பைஸலாபாத்தைச் சேர்ந்த 3 அஹ்மதி சகோதரர்கள் ஷேக் அஷ்ரபுல் கைஸ் சாஹிப், ஷேக் மஷ்ஹூது சாஹிப் இந்த இருவரும் ஷேக் பஷீர் அஹ்மத் சாஹிப் மர்ஹூம் மகன்கள் ஆவர். மேலும் ஷேக் மஸ்வூது ஜாவிதின் மகன் ஹஸன் மஷ்ஹூது சாஹிப் ஆவர். இவர்கள் இரவில் கடையை மூடி விட்டு வண்டியில் போய்க் கொண்டிருந்தார்கள். அங்கு மருத்துவமனை அருகில் போய்க் கொண்டிருந்தபோது நாலைந்து பேர் வந்து (துப்பாக்கியால்) சுட்டார்கள். மூவரும் படுகாயமுற்று மருத்துவனைக்கு போகிற வழியிலேயே ஷஹீதாகி விட்டனர். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

அஷ்ரபுல் கைஸ் சாஹிப் அவர்களுக்கு வயது 60. அவரது தம்பிக்கு 57 வயது. அக்ஸன் மஸ்வூதிற்கு வயது 24. திருமணமானவர். ஒரு வயதில் ஒரு மகள் இருக்கிறாள். அஸ்ரபுல் கைஸ் சாஹிபிற்கு மனைவி, மகள், மகளுக்கு திருமணமாகி விட்டது. இன்னொரு மகளும் அவருக்கு உண்டு. அந்த மகளுக்கும் திருமணமாகி விட்டது. 27 வயதில் ஒரு பையன் இருக்கிறான். அவருக்கும் திருமணமாகி விட்டது. இன்னொரு பையன் 22 வயது. அவருக்கு திருமணமாகவில்லை. ஷேக் மஸ்வூது ஜாவித் சாஹிபுக்கு இரு திருமணமான மகள்கள் உள்ளனர். மகன் ஒருவருக்கு திருமணமாகி விட்டது. ஷேக் பஷீர் அஹ்மத் சாஹிப் – இவர் ஒரு தூய அஹ்மதி ஆவார். தாயார் ஸைனப் பீவி சாஹிபா. இவர் ஷேக் முராத் பக்ஷ் சாஹிபின் மனைவி ஆவார்.

இவர்களுக்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடன் காதியானில் வைத்து தொடர்பு இருந்தது. அன்னார் கூறியதற்கிணங்க வீட்டிலுள்ள பெண்களுக்காக இவர் துணிமணிகள் வாங்கி வருவார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் பஜாருக்கு போய் வாங்காமல் இருப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குடும்பத்தில் முதலில் ஸைனப் பிபி சாஹிபா பைஅத் செய்திருந்தார்கள். அவரது கணவர் முராது பக்ஷ் சாஹிப் பிறகு அஹ்மதியானார். இந்தியா – பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு பைஸலாபாத் பஸாரில் கடையைத் திறந்தார். 1974 ஆம் ஆண்டு இவரது கடையை மிகவும் சேதப்படுத்தினார்கள். அல்லாஹ் அருள்புரிந்தான். துணிக்கடையுடன் சேர்ந்து பிள்ளைகளும் கடை திறந்தனர். பையன்களும் தந்தையின் நன்மைகளை தொடர்பவர்களாக இருந்தனர்.

குறிப்பாக ஷேக் அஸ்ரப் கைஸ் சாஹிப் பாகிஸ்தானில் இவர்களது ஜனாஸா எப்பேது தொழப்படும் என்று தெரியாது. நான் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு ஜனாஸா தொழ வைப்பேன்.

பைஸலாபாத்தில் கடந்த சில காலமாகவே அஹ்மதிகள் குறி வைத்து தாக்கப்படுகின்றனர். ஷஹீதாக்கப்படுகின்றனர். அல்லாஹ் கருணை காட்டுவானாக. பாகிஸ்தானில் கணிசமான மக்கள் எந்த காரணமுமின்றி மரணம் அடைகின்றனர். இவர்கள் செய்த எந்த செயலுக்காக இவ்வாறு இவர்களுக்கு மரணம் வருகிறது என்று இவர்களுக்கு புரிவதில்லை. அஹ்மதிகளுக்கு இவர்கள் இழைத்து வருகின்ற அநீதிதான் இதற்கு காரணமாகும். அஹ்மதிகளாவது ஷஹீதானாலும் ஒரு நோக்கத்திற்காக ஷஹீதாகின்றனர். ஒவ்வொரு ஷஹாதத்தும் ஷஹீதுகளின் குடும்பத்தின் தகுதியை உயர்த்தவே செய்கிறது. ஜமாஅத்தின் வளர்ச்சிக்கும் காரணமாக அமைகின்றது. இந்த ஷஹீதுகள் நிரந்தர வாழ்வை பெறுபவர்களாகின்றனர். இவரை கொன்று விட்டோம் என்று எதிரிகள் நினைக்கின்றனர். ஆனால் இவர்கள் இறைவனிடம் நிரந்தர வாழ்வைப் பெற்று விட்டனர். நிரந்தர வாழ்வை பெற்று விட்டனர். இந்த குடும்பத்தில் நடந்த ஷஹாதத்துகளும் இன்ஷா அல்லாஹ் வீணாகப் போகாது. நிச்சயம் பயன் அளிக்கும்.

நான் பாகிஸ்தான் அஹ்மதிகளிடம் கூறிக் கொள்கிறேன். குறிப்பாக எதிர்ப்புகள் அதிகமுள்ள பகுதிகளில் வாழும் அஹ்மதிகள் தாம் சென்று வரும் நேரத்தில் கவனமாக இருக்க வேண்டும். அல்லாஹ் ஷஹீதுகளின் தகுதியை உயர்த்துவானாக. அளவற்ற அருளும் மக்ஃபிரத்தும் வழங்குவானாக. அவர்களின் நினைவுச் சின்னமாக இருக்கும் வீட்டினருக்கு அழகிய பொறுமையை வழங்குவானாக. தைரியத்தை வழங்குவானாக. எப்போதும் உதவி செய்து வருவானாக. அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதியையும் பாகிஸ்தானிலும், ஒவ்வோரிடத்திலும் தனது பாதுகாப்பில் வைத்திருப்பானாக.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BASHARATH MOSQUE, SPAIN,**

**ON 02.04.2010**

Translated by : **Muallim M. NIZAMUDEEN**
Reviewed by : **Moulvi S. ABDUL QADIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**